# மக்கள் நீதி மய்யம்

PR/03032021/02/T

சென்னை
3.3.2021

**பத்திரிகை செய்தி**

**பெண்கள் நல்வாழ்வுக்கான 7 செயல்திட்டங்கள்:**

இல்லத்தரசிகளுக்கும் வருமானம்: இல்லத்தரசிகளின் கண்ணியம் காக்கப்படுவது மற்றும் அங்கீகாரம் வழங்கப்படுவதை மக்கள் நீதி மய்யம் உறுதி செய்யும்.(ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது).

1. **சீருடைப் பணியில் 50% பெண்கள்:**
அரசு சேவையில் இருக்கும் ஒவ்வொரு சீருடைத் துறையிலும் 50% பெண்கள் பிரதிநிதித்துவம் உறுதிசெய்யப்படும்.

2. **துன்பத்தில் இருக்கும் பெண்களுக்கு பாதுகாப்பு:**
துன்பத்தில் இருக்கும் பெண்கள் இரவு நேரங்களில் தங்குவதற்கென்றே அவசரகால இலவச விடுதிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்படுவதுடன், 181 பெண்கள் உதவி எண்ணில் பதிவு செய்யப்படும் புகார்கள் அனைத்தும் தொடர்ந்து கண்காணிக்கும் செயல்முறை நிறுவப்படும்.

3. **பெண்களுக்கான தயாரிப்புகளின் பொது விநியோகம்:**
பெண்களுக்கான சுகாதார நாப்கின்களை அரசாங்கமே கொள்முதல் செய்து, கிராமம் மற்றும் நகர்ப்புற ஏழைப் பெண்கள் மற்றும் இளம்பருவ பெண் குழந்தைகளுக்கு பொது விநியோக முறையில் வழங்கப்படும்.

4. **பெண்களுக்கான மாவட்ட அளவிலான மகளிர் வங்கி:**
பெண்களால்... பெண்களுக்காக... பெண்களுக்கென்று... இயங்கும் மகளிர் வங்கி உருவாக்கப்படும்.

5. **ஒற்றை தாய்மார்களுக்கான ஆதரவின் குடை:**
கல்வி, வேலை, திறன் மேம்பாடு, மற்றும் சமூக பொருளாதார ஆதரவு போன்ற அனைத்து உதவிகளும் தனித்து வாழும் தாய்மார்களுக்கு வழங்கப்படுவது உறுதி செய்யப்படும்.

6. **சிறப்பு பராமரிப்பு கட்டமைப்புகள்:**
அரசாங்கம், தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து பொது இடங்களில் பெண்களுக்கான சிறப்பு உள்கட்டமைப்பு வழங்குவதை உறுதி செய்தல். (பஸ் நிறுத்தங்கள், ரயில் நிலையங்கள் போன்றவை..)

7. **இலவச ஆரோக்கியம் மற்றும் கருத்தரிப்பு பரிசோதனைகள்:**
ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கும் ஒரு முறையாவது அனைத்து பெண்களுக்கும் இலவச ஆரோக்கியம் மற்றும் கருத்தரிப்பு பரிசோதனை வழங்க அரசாங்கம் ஏற்பாடு செய்யும்.

**நாளை நமதே!**

**நன்றி,**
**ஊடக பிரிவு,**
**மக்கள் நீதி மய்யம்.**

புதிய எண் 4, பழைய எண் 172, எல்டாம்ஸ் சாலை, ஆழ்வார் பேட்டை, சென்னை - 600018.
044 2435 8718
/maiamofficial
www.maiam.com